உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# மள்ளர்களின் நீர் மேலாண்மை

**க. கருப்பசாமி**
முனைவர் பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21

## முன்னுரை

உலகிற்கு இயற்கை அளிக்கும் வளங்களில் மிகப் பெரிய சக்தி வாய்ந்த ஆக்கவும், அழிக்கவும் வல்லமை கொண்டது நீர். உலகிலுள்ள அனைத்து அடிப்படைப் பொருள்களுக்கும் உயிர் நாடியாக இருக்கக்கூடிய இந்நீர் குறித்த செய்திகள் சங்க இலக்கியத்தில் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. அந்த வகையில் சங்க இலக்கியத்தை உற்றுநோக்கினால் சங்கச் சமூகமானது உன்னதமான அரிதான மிகப்பெரிய பண்பாட்டை, வாழ்வியலை, நாகரிக வளர்ச்சி அடைந்ததைக் காணமுடியும். நாகரிக வளர்ச்சி என்பது வேளாண்மையில் நீர்ப்பாசன நுட்பங்களுடன் வேளாண்மை செய்து, வேளாண் பொருளியலில் தன்னிறைவைப் பெற்ற வேளாண்குடிச் சமூகம் நிலவியல், வானியல், பயிரியல், நீரியல் போன்ற பலவகை அறிவைப் பெற்றிருக்கக்கூடும். நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மையை மேற்கொண்ட வேளாண்குடிச் சமூகமான உழவர்குடிகள் அரசு உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. அந்த வகையில் வேளாண்குடிச் சமூகமான உழவர் குடிகளின் நீர் மேலாண்மைச் சிந்தனைகளைக் காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## தொழில் அடிப்படையில் பெயர்

வேளாண்குடிச் சமூகமான “மருதநில மக்கள் நீரை வயல்களுக்கும், குளங்களுக்கும் கொண்டு சென்று தங்கள் வாழ்க்கைக்குப் பல துறைகளிலும் பயன்படுத்திக் கொண்டதால் ‘**வெள்ளத்தை ஆள்பவர்**’ என்னும் பொருள்பட வெள்ளாளர்(வேளாளர்) எனப்பட்டனர். ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில் மழைநீரைக் குளங்களிலும், ஏரிகளிலும் தேக்கி, பிறகு அந்நீரை வயல்களுக்குப் பாய்ச்சியவர்கள் ‘காராளர்’ (கார் - மழை) எனப்பட்டனர். புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்களுள் வெள்ளாளரே மிக உயர்ந்த நாகரிகம் பெற்றிருந்தனர் எனக் கூறுதல் பொருத்தமாகும்”[1] என்று ம. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

### கண்காணி(காணி + நிலம்)

மள்ளர்கள் நீர்நிலைகளை உருவாக்கு -வதில் மட்டுமல்லாமல், அதனை நன்குப் பாதுகாத்துப் பராமரிப்பதிலும் திறமையுடன் விளங்கினர். இதனை,

"துய்அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில்மழை மொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல
அருங்குடி அன்னையும் துயில்மறந் தனளே" (அகம்.252: 10-14)

என்ற பாடலின் மூலம் நக்கண்ணையார், கடுமையாக மழை பெய்யும் பொழுது குளம் உடையும் நிலையில் உள்ளது. அப்பொழுது குளம் உடையாமல் இருக்க பாதுகாப்பது மிகவும் அவசியம். குளம் உடையும் நிலை ஏற்பட்டால் அதனை தடுப்பது, குளத்தைப் பாதுகாப்பது கண்காணியின் பணி. அப்படி பாதுகாக்காது விட்டால் பெரிய சேதத்தை ஏற்படுத்தும். எனவே கடும் மழையிலும், இரவுப் பொழுதிலும் கண்விழித்துக் கொண்டு தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இல்லாது, மக்களுக்காகப் பாதுகாப்பது 'கண்காணி' என்பவரின் வேலையாகும். ஏரிகளின் கரை, கலிங்கு, மதகு போன்றவற்றைப் பாதுகாப்பது, ஏரிநீரை பாசனத்துக்குப் பிரித்து வழங்குவது போன்றப் பணிகளைச் செய்வது இவருடைய பணி. இதனைப் பாதுகாக்கவே ஊரில் கண்காணி என்பவரை நியமித்துள்ளனர். ராகுல் சாங்கிருத்யாயன் என்பவர், "நீர் நிலைக் காவல்காரன் கிராமத்திலுள்ள ஏரிகளையும், கால்வாய்களையும் கவனித்துக் கொள்கின்றான். எல்லா வயல்களுக்கும் சமமாக நீரைப் பங்கிடுகிறான்"[2] என்று கூறுகின்றார்.

### மடை

குளத்தில் இருந்து, நீர்ப்பாசன அளவைப் பொருத்து வேளாண்மைக்காக நீரை வெளிச்செலுத்த மடைகள் அமைக்கப்ப -ட்டிருக்கும். இந்த மடை பராமரிப்பவரை வேளாண்குடிச் சமூக இனத்தில் இருந்து பாரம்பரியமாக ஓர் குடும்பம் செய்து வரும். அத்தகைய உழவர்குடி மள்ளரான குடும்பர்களை 'குளத்துக் குடும்பன்' என அழைப்பர்.

"மடை என்பது தண்ணீரை வெளியேற்றும் ஒரு அமைப்பு. மடை என்பது ஆறு, குளம், ஏரி, கால்வாய்களில் தண்ணீர் வெளியேறுவதற்காக அமைக்கப்படுவது. இந்த மடையில் ஒரு கதவு இருக்கும். இக்கதவைத் திறந்தால் மடைதிறந்த வெள்ளம் போல் தண்ணீர் வெளியேறும். இந்த அமைப்பில் வெளியேறும் தண்ணீரின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது"[3] என்று கோமதிநாயகம் கூறுகிறார். இதனைப் பரிபாடல் பாடலானது,

"வையை உடைத்த மடை அடைத்த கண்ணும்" (பரி. 6:28)

என்று மடை பற்றித் தெரிவிக்கிறது.

## நீராணிக்காரர்

உணவுக்கு முதலானது 'நெல்' என்று அனைவரும் அறிந்த உண்மை. இதனை,

"நெல்லும் உயிரன்றே! நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம்.186: 1-2)

என்னும் பாடலானது, நெல்லும் நீரும் உயிர்களுக்கு முதன்மையானது என்று கூறப்படுகிறது. மழை நீரினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கினை, அணைப் போட்டுக் குளம் வெட்டித் தேக்கிப் பாதுகாத்து, பின்னர் ஒழுங்கு முறையில் நீரைப் பயன்படுத்தி, நீர் நிர்வாகம் செய்யக்கூடியவர்கள் உழவர்கள் என்று பள்ளு இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இவர்கள் 'நீராணிக்காரர் நீர்க்கட்டி' என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆற்றில் ஓடும் நீரினைக் கண்காணித்து நீரைத் தேக்கி வைக்க குளம் அமைத்து, குளத்திற்குத் திருப்பிவிடுவர். பின்பு இக்குளங்களில் உள்ள நீர் பாசனத்திற்காகத் திறந்து விடப்படும். விளைநிலங்களும் குளத்திற்குப் பக்கத்திலே அமைக்கப்பட்டது என்பதை,

"குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்" (புறம்.33: 5)

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் குளத்திற்கு பக்கத்திலேயே நெல்லானது விளைவதற்கு எளிமையாக, பாசனவசதிக்கேற்ப, நிலங்களை அமைத்து, நெல்பயிர்களுக்கு உரிய நேரத்தில் நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ப மடை, வாய்க்கால் உருவாக்கி, பாசன நீர் மேலாண்மையில் அறிவுத்திறம் கொண்ட வேளாண்குடி மக்களான மள்ளர்களின் வேளாண் நுட்பம் இதிலிருந்து புலப்படுகிறது.

## பிறை நிலா - குளம்

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண்பறம்பு நாடே"

கூரிய வேலையும், திரண்ட தோளையும் உடைய பாரியின் மலையில் உள்ள எட்டாம் நாள் பிறையை ஒத்த வளைந்த கரைகளையும், தெளிந்த நீரையும் உடைய சிறுகுளம் பாதுகாக்க யாரும் இல்லாமல் பாழ்படுகிறது என்று துயரப்படுகிறார் கபிலர். எட்டாம் நாள் பிறை வடிவில் அமைந்த குளம், குறைந்த நீளம் உடைய கரையைக் கொண்டு அதிகக் கொள்ளளவு கொண்ட நீரைக் கொண்டிருக்கும். அப்படி இருக்கும் நிலையில் குளத்தின் தன்மையைப் பார்த்து மள்ளர்கள் குளம் வெட்டினர்.

## உழைப்பின் வீரியத்தை விதைத்த மள்ளர்கள்

நீர்ப்பாசனத்தில் ஏற்படும் வளர்ச்சி தான் ஒரு நாட்டின் எல்லா வெற்றிக்கும் மூலதாரமாக விளங்கும். அவை,

> **“நீர்இன்று அமையா யாக்கைக் கெல்லாம்**
> **உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**
> **உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
> **நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு**
> **உடம்பும் உயிரும் படைத்திசி னோரே” (புறம்.18: 18-23)**

என்னும் பாடலானது, நீர் இல்லாமல் வாழ முடியாத உடலுக்கு, உணவு கொடுத்தோர் எவரோ, அவரே உயிர் கொடுத்தவர். உடல் உணவையே முதல் ஆதாரமாகக் கொண்டது. உணவு என்று சொல்லப்படுவது நிலமும் நீருமே. ஆகையால் நீர் வளத்தையும், நில வளத்தையும் அதிகரிக்கச் செய்தவர்கள் தான், மக்கள் வளத்தைப் பெருக்கும் ஆற்றல் கொண்ட உழவர்குடி மள்ளர்கள். எனவே நீ நாடு முழுவதும் நீர்நிலைகளைப் பெருக்குவாயாக! இதைச் செய்யும் மள்ளர்கள் மட்டுமே மூவகை இன்பத்தையும் பெற்று புகழ் பெறுவர் என்கிறார். மேலும்,

> **“வருபடைத் தாங்கிப் பெயர்புறத்து ஆர்த்துப்**
> **பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை**
> **ஊன்றுசால் மறுங்கின் ஈன்றதன் பயனே” (புறம்.35: 24-26)**

என்னும் பாடலானது, கூர்மையான வேலையுடைய வளவனே, இளம்பனையின் துண்டம் போல வேறு வேறாய்க் கிடக்க யானைக் கூட்டத்தை அழித்த போர்க்களத்தில் வரும்படையைத் தாக்கி, அதுபுறமுதுகு காட்டி ஓடுதல் கண்டு ஆரவாரித்து உன் போர்ப்படை தரும் வெற்றியும், உழவர் கலப்பையால் உழுத சாலில் விளைந்த நெல்லின் பயனே ஆகும். மழை பெய்யும் காலத்தில் பெய்யத் தவறினாலும், விளைவு குறைந்தாலும், இயல்புக்கு மாறான செயலால் தோன்றினாலும், மன்னான உன்னையே இவ்வுலகம் பழிக்கும். ஆகையால் ஏர்த்தொழில் செய்து உலகங்காக்கும் உழவர் குடியான மள்ளர் குடியைப் பாதுகாத்து வாழவேண்டும். எனவே உணவு உற்பத்தி மற்றும் வேளாண்மை வளர்ச்சியே ஒரு நாட்டின் எல்லா வெற்றிக்கும் மூல ஆதாயம். அதற்கு நீர்நிலைகளைப் பெருக்குவதே சிறந்த வழி என்று கூறுகிறது.

## மள்ளரின் வீரம்

ஐம்பூதங்களில் ஒன்றாகக் கருதப்படும் நீரானது, நிலம் என்பதுடன் இணைவு பெற்றது. நீரின் வலிமையை வெள்ளம் ஏற்படும் போது மட்டுமே காண முடியும். அவ்வாறு வெள்ளம் ஏற்படும் போது யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை,

> **“நீர்மிகின் சிறையும் இல்லை….” (புறம்.51:1)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். நீரின் தன்மையை அறியாதவர்களுக்கு நீரானது பெரும் ஆபத்து நிறைந்தது. நீரினைக் கடந்து செல்வதற்கு துணிவும், மனவலிமையும், ஆற்றலும் இருக்க வேண்டும். இத்தகைய ஆபத்தான நீரினை, வேந்தனான உழவர்குடி மள்ளர்களின் வீரத்திற்கு இணையாகப் பேசப்படுவதை,

"ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு
உமணர் வெரூஉம் துறையன் னன்னே" (புறம்.84: 5-6)

என்னும் பாடிலடிகளின் மூலம் வீரத்தினை தெரிந்து கொள்ளமுடிகிறது.

## முடிவுரை

ஏரி, குளம், அணையை மழைக் -காலத்திலும், இரவிலும் பாதுகாக்கும் உடல் வலிமையும், மதகுகளை, கரையைக் கட்டப்படுத்தும் மதிநுட்பமும், இரவு நேரங்களில் ஊடுருவிப் பார்க்கும் தன்மையும், கடமை தவறாமல் பணியாற்றவும் வேளாண்குடிச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் திறமையானவர்கள். மள்ளர்குலச் சமூகமான இவர்கள் நீரைச் சிக்கனமாகவும், மிகச்சிறந்த முறையில் பாதுகாக்கும் முறையையும் காலங்காலமாகத் தொன்றுதொட்டு வந்துள்ளதன் மூலம் மேலாண்மைத்திறனில் கலைநுட்பத்துடன் தலைச்சிறந்தவர்களாக, மற்றவர்களுக்கு முன்னுதராணமாக இருந்துள்ளனர் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரை உள்ளது.

## முதன்மை நூல்


1. தமிழண்ணல். (ப.ஆ), சங்க இலக்கியம் மக்கள் பதிப்பு வரிசை, கோவிலூர் மடாலயம், கோவிலூர். ((முதற்பதிப்பு - ஏப்ரல். 2003)


## துணைநின்ற நூல்கள்


1. இராசமாணிக்கனார். தமிழக வரலாறு, செண்பகா பதிப்பகம், சென்னை. (பதிப்பு-2011)
2. ராகுல் சாங்கிருத்யாயன், மனித சமுதாயம், சென்னை - 98.
3. கோமதிநாயகம்.பழ, தமிழக பாசன வரலாறு, சென்னை-(பதிப்பு - 2010).